(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 131.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 பெப்ரவரி 18, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1466/2025

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் காட்டு விலங்குகளின் தாக்குதல்கள், பாம்புக் கடி, குளவிக் கொட்டு மற்றும் இரசாயனப் பதார்த்தங்களால் ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கும் உள்ளாவதை அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், கடந்த ஐந்து வருட காலப்பகுதியினுள் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி ஆபத்துகளில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது தொழிலிடங்களில் தொழில் வழங்குநர்களின் வாய்மூல, உடல் ரீதியான அல்லது வேறு வகையிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி துன்புறுத்தல்களை தடுப்பதற்காக ஏதேனும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1500/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தோட்டப்புற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மேற்படி தோட்டப்புற வீடுகளை அபிவிருத்தி செய்ய ஒதுக்கப்பட்ட நிதி ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தோட்டப்புற வீடுகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1542/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை, நாகஸ்தென்ன தோட்டம் இன்றளவில் யாருக்குச் சொந்தமானது என்பதையும்;

(ii) அந்தத் தோட்டத்தின் முகாமைத்துவம் சிறந்த மட்டத்தில் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) அந்தத் தோட்டத்திற்குரிய காணிகள் தனியாரினால் கைப்பற்றப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி தோட்டத்திலுள்ள பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமுதாய ரீதியில் பெறுமதிமிக்க காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1576/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தினால் மலையக மக்களுக்காக 'சிட்டி ரைடர்' பேருந்துகள் வழங்கப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பேருந்துகள் வழங்கப்பட்டதன் குறிக்கோள் யாதென்பதையும்;

(iv) மேற்படி பேருந்துகளை வழங்கிய அமைப்புகள் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொண்ட அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அப்பேருந்துகளில் பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) மேற்படி பேருந்துகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(vii) மேற்படி பேருந்துகளை தற்பொழுது பயன்படுத்தும் தரப்பினர் மற்றும் எவ்வகையான பணிகளுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1637/2025

கௌரவ ருவன் விஜேவீர,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'செமட செவன' கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த கருத்திட்டத்திற்கான நிதி மூலம் யாதென்பதையும்;

(iii) இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக பயனாளிகளைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த கருத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை மற்றும் உண்மையில் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1664/2025

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் களுத்துறை மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு, இறையிலி உறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் காணி அனுமதிப்பத்திரங்கள் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அனுமதிப்பத்திர காணிகளுக்காக இறையிலி உறுதிகளை வழங்க முடியுமா என்பதையும்;

(iv) பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில், பயன்படுத்தாது கைவிடப்பட்டுள்ள காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அவ்வாறான காணிகளை மீண்டும் கையகப்படுத்தி, காணியற்றோருக்கு வழங்க முடியுமா என்பதையும்;

(vi) தனி நபர்கள் அல்லது நிறுவனங்களால் முறைகேடாக கையகப்படுத்தியுள்ள காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதுமான காணிகளின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1696/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வணிக நோக்கத்திற்காக வெடி மருந்துகளைப் பயன்படுத்துவது குறித்து தற்போது வலுவிலுள்ள சட்டங்களின் எப்பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகிறது என்பதையும்;

(ii) வெடி மருந்துகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகிக்கும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) அந்தத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் அலுவலர்களின் பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அப்பணிக்காக மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பின், அவர்களின் பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

(v) இன்றளவில் வெடி மருந்துக் கட்டுப்பாட்டாளர் பதவி வெற்றிடமாக உள்ளதா என்பதையும்;

(vi) அந்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) மேற்படி பதவிக்கு இரண்டாந்தர அலுவலர்கள் பயிற்றப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வணிக அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ள வெடி மருந்து உரிமங்கள் மற்றும் தற்போதைய செயற்பாட்டு உரிமம் பெறுநர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) இத்தகைய உரிமங்களை விநியோகிப்பதற்காக பின்பற்றப்படுகின்ற வழிமுறை யாதென்பதையும்;

(iii) அவ் உரிமங்கள் ஒழுங்குறுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(iv) வெடி மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தனியார் நிலையங்கள் யாவை என்பதையும்;

(v) அவற்றின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) உரிமம்பெறுநர் ஒருவருக்கு தடவை ஒன்றில் விநியோகிக்கப்படுகின்ற வெடி மருந்துகளின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1720/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் திணைக்களத்தின் முறைப்பாட்டு பிரிவில் முறைப்பாடொன்றைத் தீர்க்க எடுக்கும் சாதாரண காலம் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில், அந்தப் பிரிவில் இருக்கும் தீர்க்கப்படாத முறைபாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த முறைபாடுகளைத் துரிதமாகவும் பயனுடையதாகவும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1739/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் சுனாமியின் பின்னர் மீளமைக்கப்பட்ட மீனவக் கட்டடங்கள் உள்ளன என்பதையும்;

(ii) அவற்றுள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடப்பட்ட அல்லது விற்பனைச் செய்யப்பட்ட மீனவக் கட்டடங்கள் உள்ளன என்பதையும்;

(iii) அவ்வாறான கட்டடங்களில் தற்போது வரை பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டங்களும் உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ)(iii)இல் குறிப்பிடப்பட்டுள்ள மீனவக் கட்டடங்களை அரச மற்றும் பொதுத் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) சுனாமியின் பின்னர், சிறு மீனவ சம்மேளனத்தால் ஜலால்டீன் சதுக்கத்திலும் கனகர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்ட மீனவர் பல்தேவைக் கட்டடங்களுக்கு பொறுப்பாக பணியாற்றுகின்ற, வருமானத்தை அறிவிடுகின்ற மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கின்ற தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி கட்டட வளவுகளின் உரிமையாளர்கள் அடையாளங் காணப்பட்டால், பொத்துவில் பிரதேச செயலகம் மூலம் அவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி, மேற்படி மீனவ பல்தேவைக் கட்டடங்களை பொத்துவில் பிரதேச சபைக்கு அல்லது பொது மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1809/2026

கௌரவ லசித் பாஷன கமகே,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநீதிக்கு உள்ளான வைப்பாளர்களினால் கம்பஹா சனச வங்கி தொடர்பில் பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த முறைப்பாடுகள் பொலிசாருக்குக் கிடைத்த திகதி ஒவ்வொரு முறைப்பாட்டிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அந்த முறைப்பாடுகள் தொடர்பாக பொலிசார் இதுவரை மேற்கொண்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) சனச வங்கியின் மூலம் கடன் பெற்றுள்ள Gampaha Development Company (PVT) Ltd, (GDC) நிறுவனம் தொடர்பாக பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அந்த முறைப்பாடுகள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரியாஸ் பாருக் அவர்கள், தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக 2026 பெப்ரவரி 05 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

2.

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2(3) ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 நவம்பர் 25 ஆம் திகதிய 2464/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 திசெம்பர் 04 ஆம் திகதிய 2465/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 திசெம்பர் 31 ஆம் திகதிய 2469/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பில் 2026.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2025 நவம்பர் 25 ஆம் திகதிய 2464/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 44, 123, 124, 125, 126, 126ஆ, 128, 132, 132அ மற்றும் 231 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 நவெம்பர் 17 ஆம் திகதிய 2463/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 திசெம்பர் 17 ஆம் திகதிய 2467/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.02.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*14.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

15.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1845/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 தொடக்கம் 2025 வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் இடம்பெற்றுள்ள ஆட்கொலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் இடம்பெற்றுள்ள பாலியல் வன்புணர்வு சம்பவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஆண்டு வாரியாக வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1846/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதிர்காமத் தேவாலயத்திற்குச் சொந்தமான தங்க நகைகள் மற்றும் ஏனைய தங்கப் பொருட்களின் மொத்த தங்கத்தின் நிறை யாதென்பதையும்;

(ii) மேற்படி அனைத்து தங்க நகைகளையும் அல்லது ஒரு பகுதியை விற்பனை செய்து கிடைக்கப் பெறும் நிதியை அரசாங்கத்திடம் கையளிப்பதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், மேற்படி தங்கப் பொருட்களை ஏலத்தில் விற்பனைச் செய்யும் வரை அவற்றை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தங்கப் பொருட்களை விற்பனைச் செய்யும் பொருட்டு பின்பற்றுவதற்கு உத்தேசித்துள்ள வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1847/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்காக இலங்கை பொலிசாரினால் விடுவிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டிற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதற்கமைய தற்போது விடுவிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆணைக்குழுவின் பணிகளுக்கான புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1848/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் ஒவ்வொரு வருடத்திலும் இலங்கையில் பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதிக்குள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை பொலிசாரினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பண்டாரகம பொலிஸ் நிலையம் இயங்கி வரும் கட்டடம் பழையதாகவும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையத்திற்கு வசதிகளுடன் கூடிய நவீன கட்டடமொன்றின் தேவை நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) பண்டாரகம பொலிஸ் நிலைய வளாகத்தை மேம்படுத்துவதற்காகக் கட்டடத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான உத்தேச செலவு எவ்வளவு என்பதையும்;

(v) உத்தியோகத்தர் விடுதித் தேவையை நிவர்த்தி செய்வதற்காக பண்டாரகம பொலிஸ் நிலைய வளாகத்தினுள் உத்தியோகத்தர் விடுதித் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அது தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1849/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் நடவடிக்கைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 2025.07.15 ஆம் திகதிய அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படிக் குழுவின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) அவ்விதப்புரைகளின் பிரகாரம், இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிருவாக மாற்றங்கள் யாவை என்பதையும்;

(v) குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளின் பிரகாரம், மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள சட்டரீதியான திருத்தங்கள் யாவை என்பதையும்;

(vi) அத்திருத்தங்கள் தொடர்பாக தற்போது நிலவும் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடன் இணக்கச் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) கடன் இணக்கச் சபைக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கடன் இணக்கச் சபைக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1850/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகள் அடிக்கடி வெள்ளநிலைக்கு உட்படுவதால், அப்பிரதேசங்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை தொடர்ச்சியாகப் முன்னெடுத்துச் செல்வதற்கு தற்போது பாதியளவு நிர்மாணிக்கப்பட்டு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெல்பொல இடைமாறல் பகுதியை நிர்மாணித்து முடிக்க வேண்டும் என 2025.12.11 ஆம் திகதி நடைபெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் தீர்மானம் எட்டப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மில்லனிய, களுத்துறை வடக்கு மற்றும் புலத்சிங்ஹல பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசிப்பதற்கு போதியளவு வழிகள் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) தற்போது பாதியளவு பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள பெல்பொல இடைமாறல் பகுதியின் பணிகளை நிறைவுசெய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1851/2026

கௌரவ அஜித்.பி.பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1989.11.13 ஆம் திகதி படுகொலைச் செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் திரு.ரோஹண விஜேவீரவின் மறைவின் பின்னர், அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் அவர்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அரசாங்கத்தின் பராமரிப்பின் கீழ் இருந்த ஆட்களுக்கும், திரு. ரோஹண விஜேவீரவுக்கும் இடையிலான உறவு முறை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்களை தடுத்து வைத்திருந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது அரச பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினைப் பெறுகின்ற திரு. ரோஹண விஜேவீரவின் குடும்ப அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் குடும்ப அங்கத்தவர்களை பராமரிப்பதற்காக இதுரையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு மதிப்பீட்டடிப்டையில் எவ்வளவு என்பதையும்;

(vi) தற்போது அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெறுகின்ற அக்குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக அரசாங்கத்தால் மாதாந்தம் செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?